2009 ஜூலை 9]

110—

கட்டட வசதி

***31022—திரு. எஸ். ஜெயபால்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளச்சல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் புதிய கட்டடம் கட்ட வழிவகை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை, மாறாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் பகுதியில் சுமார் 15 ஆயிரம் மீனவ மக்கள் வசிக்கிறார்கள். மீனவர்கள் நலனுக்காக மீனவர் கூட்டுறவுச் சங்கம்வாயிலாக நகைக் கடன், தொழில் கடன் வழங்கப்படுவதோடு ரேஷன் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில், ஆபத்தான நிலையில் உள்ளது. இந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு அரசு நிதியுதவி செய்யுமா அல்லது மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் நிதி உள்ளதாக அறிகிறோம். ஆகவே, மீனவர் கூட்டுறவுச் சங்கம்மூலமாக புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட சங்கத்தில் போதிய நிதி இல்லாததால், நமக்கு நாமே திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டித் தர மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. நமக்கு நாமே திட்டத்தின்கீழ்

[2009 ஜூலை 9

புதிய கட்டடம் கட்ட வழிவகை இல்லை என மாவட்ட ஆட்சியரிடமிருந்து தகவல் பெறப்பட்டுள்ளது. எனவே, குளச்சல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய கட்டடத்தினை முறைப்படி பழுதுபார்க்கவும், அது இயலாத நிலையில் வாடகைக் கட்டடத்தில் சங்கம் இயங்கவும், மீன் துறை உதவி இயக்குநர் ஆவன செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப்.*

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல குளச்சலை அடுத்துள்ள தேங்காப்பட்டணத்திலும், குளச்சலிலும் மீன்பிடி துறைமுகம் வர இருப்பதால், அந்த மக்களின் நிதி ஆதாரத்தைப் பெருக்கும் விதத்திலே தேங்காப்பட்டணத்திலும் ஒரு கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-30

2. தகவல் கோரல்

(அ) வேலூர் மாவட்டத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*